## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

**முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,**
**மாவட்ட நீதிபதி**

**2026–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23–ஆம் நாள் திங்கள்க்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 பங்குனித் திங்கள் 09–ஆம் நாள்**

**முதலேற்பு வழக்கு எண்.1005/2024 –இல்**
**வழக்கிடை விண்ணப்ப எண் 01/2026**

**M. பாலசுப்ரமணியம் ...மனுதாரர்/பிரதிவாதி**

**–எதிர்–**

**01. P. எழில்முருகன்**
**02. V.P.சண்முகம் ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்**

இந்த மனுவில் மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு.S.சௌண்டப்பன்** அவர்களும் எதிர்மனுதாரர்களுக்காக வழக்குரைஞர் **திரு.G.நரசிம்மன்** அவர்களும் தோன்றினர். இந்த மனு இறுதி விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பினரும் முன்வைத்த வாதங்களை கவனத்தில் வைத்தும் வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந் நாள்வரை நிலுவையிலிருந்த இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

### முகவுரை

மனுதாரர்/பிரதிவாதியை இந் நீதிமன்றம் தோன்றாத் தரப்பினராக்கி 10.10.2025-ஆம் தேதியன்று பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்து மனுதாரரின் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொண்டு வழக்கை மேல்நடத்த மனுதாரர்/பிரதிவாதிக்கு வாய்ப்பு வழங்கக் கோரி உரிமையியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் 09-ஆம் வகுமுறையின் 07-ஆம் விதியின்கீழ் இந்த மனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

III rd ADJ Court, Salem

**மனுவின் சுருக்கம்**

01. மனுதாரர் முதலேற்பு வழக்கில் பிரதிவாதி ஆவார். மனுதாரர்/பிரதிவாதி ஆஸ்திரேலியா நாட்டில் உள்ள தனது மகள் வீட்டிற்கு 01.08.2025-ஆம் தேதியன்று சென்றார். 22.12.2025-ஆம் தேதியன்றுதான் திரும்பிவந்தார். முதலேற்பு வழக்கில் வழக்குரைஞர் மூலம் தோன்றிய மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல்செய்ய வழக்குரைஞருக்கு உரிய விவரங்கள் சொல்ல முடியாமல் போனது. 10.10.2025-ஆம் தேதியன்று எதிர்வழக்குரை தாக்கல்செய்யாததால் இந் நீதிமன்றம் மனுதாரர்/பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக்கி ஆணையிட்டது. மனுதாரரின் தவறுகை எதிர்பாராத விதமாக ஏற்பட்டது. மனுதாரரின் அலட்சியத்தாலோ அச்சுறுத்தலாலோ ஏற்பட்டதல்ல. ஆகையால், இந்த மனுவை அனுமதித்து 10.10.2025-ஆம் தேதியன்று மனுதாரர்/பிரதிவாதியை தோன்றாத் தரப்பினராக்கி இந் நீதிமன்றம் பிறப்பித்த ஆணையை இரத்துச் செய்து ஆணையிட வேண்டும். இந்த மனுவுடன் மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்.

**எதிருரையின் சுருக்கம்**

02. இந்த வழக்கு நிலுவையில் இருப்பது மனுதாரர்/பிரதிவாதிக்கு தெரியும். வேண்டுமென்றே எதிர்வழக்குரை தாக்கல்செய்யாமல் இருந்துவிட்டுத் தற்போது பொய்யான காரணங்களை சொல்லி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார். மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளும் காரணங்களும் இந்த மனுவிற்காக இட்டுக்கட்டி கூறப்பட்டுள்ளன. ஆகையால், இந்த மனுவைத் தள்ளுபடிச் செய்ய வேண்டும்.

IIIrd ADJ Court, Salem

## தீர்வுகாண வேண்டிய விவாதக்கூறுகள்

03. இம் மனு அனுமதிக்கத்தக்கதா?

## தீர்முடிவு

04. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்குக் கோப்புகள் ஓர்வுசெய்யப்பட்டன. எதிர்மனுதாரர்கள்/வாதிகள் பாகப்பிரிவினைக்காக மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக முதலேற்பு வழக்கைத் தொடுத்துள்ளனர். முதலேற்பு வழக்கில் வழக்குரைஞர் மூலம் தோன்றிய மனுதாரர்/பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல்செய்யாததால் 10.10.2025-ஆம் நாள் தோன்றாத் தரப்பினராக ஆக்கப்பட்டார். 14.11.2025-ஆம் தேதியன்று எதிரவரில்லா நிலையில் வாதி தரப்பு 01-ஆம் சான்றாளரின் சாட்சியம் பதிவுசெய்யப் பட்டது. வாதி தரப்புக் கூடுதல் சாட்சியத்திற்காக வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரர்/பிரதிவாதி இந்த மனுவை தாக்கல்செய்துள்ளார்.

05. வழக்குகள் அனைத்தும் தகுதிப்பாட்டின் அடிப்படையில் முடிவு செய்யப்பட வேண்டும் என்பது நன்கு நிறுவப்பட்ட சட்டவிதி ஆகும். உரிய நேரத்தில் ஏன் எதிர்வழக்குரை தாக்கல்செய்ய முடியவில்லை என்பதற்கு மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணத்தை புறந்தள்ள முகாந்திரம் இல்லை. இந்த மனுவுடன் எதிர்வழக்குரையும் தாக்கல்செய்யப்பட்டுள்ளது. ஆகையால், இந்த மனுவை அனுமதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

06. இருப்பினும் காலதாதமதத்தால் எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு ஏற்பட்ட இன்னலை ஈடுசெய்ய செலவுத்தொகை செலுத்த வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பது உகந்தது என்று இந் நீதிமன்றம்முடிவு செய்கிறது.

IIIrd ADJ Court, Salem

## இறுதிமுடிவு

07. இறுதியாக,மனுதாரர்/பிரதிவாதி எதிர்மனுதாரர்கள்/வாதிகளுக்கு 30.03.2026-ஆம் தேதியன்றுக்குள் 1000/- உருபாயை செலவுத்தொகையாக செலுத்தவேண்டும் என்ற நிபந்தனையுடன் இந்த மனு அனுமதிக்கப் படுகிறது. தவறினால் இந்த மனு தள்ளுபடிச் செய்யப்படும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 23–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.03.23 19:03:09 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**

**சேலம்.**

**இணைப்பு:–** இல்லை

III rd ADJ Court, Salem